


# சத்தி பண்ணாரி அம்மன் கல்லூரியில் கோடைகால வாள்வீச்சு பயிற்சி முகாம்

சத்தியமங்கலம், மே 19–

சத்தி பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரியில், கோடைகால வாள்வீச்சு பயிற்சி முகாம் நடைபெற்றது.

சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் ஈரோடு வாள்வீச்சு கழகம் ஆகியவை இணைந்து, மாநில அளவிலான வாள்வீச்சிற்கான கோடைகால சிறப்பு பயிற்சி முகாமை, கடந்த இரண்டு வாரங்களாக நடத்தியது.

கல்லூரியில் நடைபெற்ற முகாமிற்கு, மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்து மாணவர்கள் பங்கேற்று பயிற்சி பெற்றனர்.

மாணவர்களுக்கு சான்றிதழ்

பயிற்சி முகாமின் நிறைவு விழாவில், சத்தியமங்கலம் வட்டாட்சியர் சேதுராஜ் கலந்து கொண்டு, பயிற்சி பெற்ற மாணவர்களை வாழ்த்தியும், பாராட்டியும் நற்சான்றிதழ்களை வழங்கினார்.

முதல்வர் (பொறுப்பு) மற்றும் நிர்வாக அலுவலர் சிவகுமார், முனைவர் தியாகராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவு பரிசு மற்றும் பொன்னாடை வழங்கி கவுரவித்தனர்.

முன்னதாக, கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் ஜெயராமன் வரவேற்றார்.

மேலும், ஈரோடு மாவட்ட வாள்வீச்சு கழகத்தின் செயலர் வரதராஜன், கல்லூரியின் தலைவர் பாலசுப்பிரமணியம் மற்றும் கல்லூரி முதல்வர் சரவணன், இப்பயிற்சி முகாம் மற்றும் விழா சிறப்பாக நடைபெற, பல்வேறு உதவி அளித்தமைக்கு நன்றி கூறினர்.